

சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# மாணவர்களுக்கு போட்டி தேர்வு

## 2 ஆயிரம் பேர் பங்கேற்றனர்

சென்னை, பிப்.17–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் நேற்று 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு போட்டி தேர்வு நடைபெற்றது.

இந்த தேர்வு சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் வைத்து காலை 10.30 மணிக்கு தொடங்கி மதியம் 12.30 மணி வரை நடந்தது. இதில் மாநில கல்வி வாரியம், மெட்ரிக் மற்றும் சி.பி.எஸ்.இ பிரிவுகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழி கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

பாடப்புத்தகத்தில் உள்ள கேள்விகள் அடிப்படையில் இந்த போட்டி தேர்வு நடைபெற்றது. இந்த போட்டி தேர்வில் 2 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.